# சாதனைக்கு வித்திட்ட மண்





ந.அரியரத்தினம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பொதுவாக வரலாற்றை ஆவணப்படுத்தத் தவறும்பொழுது ஏற்படுகின்ற தீமைகள் நாம் அறிந்தவையே. எனவே சிறிய சம்பவங்களையும் நாம் ஆவணப்படுத்துவது அவசியமாகின்றது. மேலும் அண்மையில் மண்ணுணர்வும் ஊர் உணர்வுமுள்ள திரு. சுந்தரலிங்கத்தைச் சந்தித்தபோது ஆழிக்குமரன் ஆனந்தன் தொடர்பான வரலாறு தெரியாத பலர் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பது பற்றிய தனது கவலைகளை என்னுடன் பகிர்ந்துகொண்டார். இந்த சிறிய வரலாற்று ஆவண நூல் ஆக்கத்திற்கு பொதுவான பல காரணங்கள் இருந்தாலும் திரு. சுந்தரலிங்கத்துடன் உரையாடிய சம்பவம் உடனடிக் காரணமாக அமைந்தது எனக் கூறலாம். மேலும் இந்த மண்ணின் சிறப்பையும் எமது முன்னோர்கள் செய்த சாதனைகளையும் இன்றுள்ள நாம் தெரிந்துகொள்வது எல்லோருக்கும் எல்லா வகையிலும் பயனுள்ள நல்ல விடயமாக அமையும். குறிப்பாக இளைஞர்களுக்கு இது உத்வேகத்தைக் கொடுப்பதாக அமையலாம். அத்துடன் எதிர்கால சந்ததிக்கும் இதனை நாம் கையளிப்பது எமது கடமையாகிறது. எனவே இதனை அனைவரும் வாசித்து பயனடைவது எமக்கு நிறைவை அளிப்பதாக அமையும்.

இந்நிகழ்வுகள் எமது காலத்தில் நடைபெற்றாலும் சில நிகழ்வுகள் நடைபெற்று அரை நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகின்றது. எனவே சம்பந்தப்பட்ட சிலருடைய பெயர்கள் விடுபடுதல் போன்ற சில தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே அவற்றை தயவுகூர்ந்து பொறுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஆனாலும் எதிர்காலப் பதிப்புகள் இடம்பெறும் பொழுது அவைகளும் உள்ளடக்கப்பட்டு அவ்வாறான தவறுகளையும் நிவர்த்தி செய்ய முடியுமென நம்புகின்றேன்.

சந்நிதியும் அன்னதான மடங்களும், சந்நிதியின் சித்தர்கள் ஆகிய இரண்டு ஆண்மீக ஆவன நூல்கள் ஏற்கனவே திருவருளின் துணைகொண்டு வெளியீடு செய்துள்ளேன். அந்த வரிசையில் இது ஒரு சிறிய வரலாற்று ஆவணநூலாகும். ஆனாலும் முக்கிய வரலாற்றுத் தகவல்கள் இந் நூலில் உள்ளடங்கி உள்ளது என நம்புகின்றேன்.

***23.05.2019***

ந.அரியரத்தினம்
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்கு வித்திட்ட மண்

## ஆழிக்குமரன் ஆனந்தன்

வல்வெட்டித்துறை மண்ணில் பிறந்து தேசிய சாதனைகள் நிலைநாட்டிய சாதனையாளன் என்று நாம் உளப்பூர்வமாக குறிப்பிடக் கூடிய ஒருவர்தான் ஆழிக்குமரன் ஆனந்தனாவார். வல்வை மண்ணில் இராஜரத்தினம் அம்மாளுக்கும் விவேகானந்தனுக்கும் 1943 மே மாதம் 25ம் திகதி மகனாகப் பிறந்தவர்தான் ஆனந்தன். தனி ஒரு நபராக இருந்து உலக சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியது அவருடைய தனித்துவமாகும். ஆழிக்குமரன் ஆனந்தன் பல உலக சாதனைகளை நிகழ்த்தினாலும் அவரது முதலாவது உலக சாதனையாக பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த செயற்பாடு அமைந் துள்ளது. ஆழிக்குமரன் ஆனந்தனை பொறுத்தவரை பாக்குநீரிணையை நீந்திக் கடந்த சாதனை முதலாவது சாதனை மட்டுமல்ல அது அவரது ஆழ்மனதில் அமிழ்ந்து கிடந்த தூரநோக்கு இலட்சியங்களுக்கும் வித்திட்ட சாதனையாகவும் அமைந்திருந்தது.

அன்னை திரேசா காருண்யத்திலும் இராம கிருஷ்ண பரமகம்சர் ஆன்மீகத்திலும் தேசியத் தலைவர் பிரபாகரன் இன விடுதலைப் போராட்டத்திலும் பிரகாசிக்கப் போகின்றனர் என்பதை அவர்களது இளமைக்கால செயற்பாடுகளே வெளிப்படுத்தியிருந்தன. ஆனாலும் சமூகம் இவ்வாறானவர்களை அப்பொழுது இனங்கண்டு கொள்வதில்லை. இதேபோன்று ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு உலக சாதனைகளை நிகழ்த்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உணர்வும், உந்துதலும் தன்னம்பிக்கையும் அவரது கட்டிளமைப் பருவ காலத்திற்கு முன்பே ஏற்பட்டுள்ளது என்பதை நாம் உணரமுடிகிறது. அது மட்டுமல்ல இதனை நடைமுறைச் சாத்தியமாக்குகின்ற செயற்பாட்டிற்காக தன்னை புடம்போட்டு எடுத்துக்கொண்ட ஒரு செயல் வீரனாகவும் அவர் விளங்கியுள்ளார். இவற்றை எல்லாம் நாம் நன்கு விளங்கிக்கொள்வதற்கு ஆனந்தனது முதலாவது உலக சாதனையான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனை தொடர்பான விடயங்களை பின்நோக்கிப் பார்ப்பது பொருத்தமானது.

**சாதனை எண்ணக்கரு**

ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிய வேண்டுமென்ற உணர்வு எப்பொழுது எவ்வாறு ஏற்பட்டதென்பதை சரியாக வெளிப்படுத்த முடியாதுள்ளது. ஆனாலும் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி கற்றுக் கொண்டிருக்கும்பொழுது 1962ஆம் ஆண்டு அதனை அவர் தனது நண்பனான ஜலீல் என்பவருக்கு முதன் முதல் வெளிப்படுத்தியுள்ளார். வல்வை நகரம் கடலோர நகரமாக இருப்பதனாலும் எமது மூதாதையர் கடலோடி களாக இருந்துவருவதனாலும் மிக இளமையிலேயே அவருக்கு இந்த விருப்பம் ஏற்பட்டிருக்கலாம். இதனால் தான் இதற்காக இளமையிலிருந்தே தன்னை பக்குவப் படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளதை காண முடிகிறது. மேலும் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநாட்டுவது தனது ஆழ்மனது தூரநோக்கு இலட்சியங்களுக்கு எல்லாம் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரமான ஒன்று என்பதை ஆனந்தன் மிகவும் நன்றாகவே உணர்ந்திருந்தார். இதனால் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநாட்டுகின்ற செயற்பாட்டின் ஒவ்வொரு அடியையும் மிகமிக அவதானமாகவே எடுத்து வைத்துள்ளதை பார்க்க முடிகிறது.

## கடலோடிகளின் உதவி

இதற்கு அவருக்கு உற்ற துணையாக இருந்து செயற்படக்கூடிய கடல் அனுபவம் வாய்ந்த ஆள் அணியினரின் பங்களிப்பு மிக முக்கியமான ஒன்று என்பதை உணர்ந்துகொண்டார். இதற்காக ஆனந்த னுடைய தந்தையார் விவேகானந்தர் தனது நண்பரான ஆதி கோவிலடியைச் சேர்ந்த பொ. தனபாலசிங்கத்திடம் நாடிவந்து உதவிக்கரம் கோரியுள்ளார். இதன் பின்பு பொ. தனபாலசிங்கத்தினூடாக ஆதிகோவிலடியில் அப்பொழுது இளமைத் துடிப்பும் கடல் அனுபவமும் உள்ளவர்களது ஒத்துழைப்புகளும் பெறப்பட்டன.

## முன்னோடி முயற்சிகள்

ஆனந்தனது பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் உலக சாதனைக்கு முன்னோடியாக நாகர்கோவிலில் இருந்து தொண்டைமானாறு வரை நீந்துகின்ற முயற்சி முதலில் மேற்கொள்ளப்பட்டது. ஆனந்தனுடைய தந்தையார் விவேகானந்தன் ஆனந்தனை தனபால சிங்கத்திற்கு அறிமுகப்படுத்திய நிலையில் சகஜமாக பழகக்கூடிய தனபாலசிங்கத்துடன் 18 வயதே நிரம்பிய ஆனந்தனும் நண்பன் போல பழக ஆரம்பித்தார். இதன்பின் பொ. தனபாலசிங்கத்தின் இயந்திரம் பூட்டிய கட்டுமரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர்கோவிலுக்கு கடல் வழியாக ஆனந்தன் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே இருந்து ஆனந்தன் தனது முன்னோடி நீச்சல் செயற்பாட்டை தொண்டைமானாறு வரை மேற்கொண்டார். அப்பொழுது *P.T.R* என சுருக்கமாக அழைக்கப்படும் திரு. பொ.தங்கராசா அவர்களும் தனபாலசிங்கத்துடன் இணைந்து இந்த முன்னோடி நீச்சல் செயற்பாட்டிற்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

ஆனந்தன் தனது முன்னோடி நீச்சல் முயற்சியை நாகர்கோவிலில் இருந்து வெற்றிகரமாக மேற்கொண்டு வந்து கொண்டிருக்கும் பொழுது ஆதி கோவிலடியைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் கட்டுமரத்தில் சென்று உற்சாகமூட்டி பக்க துணையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். எமது வீட்டிலிருந்தே ஆனந்தன் புறப்பட்டு சென்றதால் ந. சிவரட்ணம் (Banker) உட்பட எனது மூத்த சகோதரர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர். இதில் ஆனந்தனுக்கு களைப்பு ஏற்படும் தருணங்களில் குளுக்கோஸ் தண்ணி கொடுக்கும் செயற்பாட்டை தான் மேற்கொண்ட அனுபவத்தை ந. சிவரட்ணமும் இதேபோன்று தற்போதைய நகரசபை உறுப்பினர் திரு. சுந்தரலிங்கமும் இந்த நீச்சல் செயற்பாட்டில் தத்தமது அனுபவங்களை என்னுடன் பகிர்ந்துகொண்டனர்.

ஆம் ஆனந்தன் தனது சொந்த மண்ணில் உள்ளவர்களின் ஆதரவுடனும் உற்சாகத்துடனும் தான் நினைத்தது போல தனது முன்னோடி நீச்சல் செயற்பாட்டை தொண்டைமானாறு வரை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளார். இவ்விடத்தில் ஆனந்தனது மிகத் துணிகரமான ஒரு செயற்பாட்டையும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவது அவசியமாகும். இந்த முன்னோடி நீச்சல் செயற்பாட்டுக்கு முன்னரே கடலில் எவருடைய துணையுமின்றி பருத்தித்துறையில் இருந்து வல்வை வரை தனியாக நீந்தி வருகின்ற முயற்சியையும் மேற்கொண்டு அதில் பெருமளவு வெற்றியும் பெற்றுள்ளார்.

**உலகசாதனைக்கான முயற்சி**

இவ்வாறு ஆனந்தனுடைய இந்த முன்னோடி முயற்சிகள் வெற்றிபெற்ற சில காலத்தின் பின் பாக்குநீரிணையை வல்வை மண்ணிலிருந்து நீந்திகடக்கின்ற உலக சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1963ஆம் ஆண்டில் ஆனந்தனது 18 ஆவது வயதில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த செயற்பாட்டில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கடல் வழித்துணை, கடல்வழி பாதுகாப்பு என்பவற்றுடன் கண்காணிப்பாளர்கள், உறவினர்கள், நண்பர்கள், பத்திரிகையாளர்கள் என அனைவரையும் அழைத்துச் செல்லுதல் என அனைத்துச் செயற்பாடுகளிலும் துணிச்சலும் அனுபவமும் நிறைந்த ஆதி கோவிலடியைச் சேர்ந்த ஆளணியினர் பங்களிப்புச் செய்தனர்.

இதில் ஆதிசக்தி, ஆதி ஐயா போன்ற சங்க வள்ளங்களும் உதயசூரியன் போன்ற தனியாருடைய பெரியதும் சிறியதுமான வள்ளங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. இது ஆனந்தனது முதலாவது உலக சாதனை முயற்சி என்பதால் எல்லா வகையான திட்டமிடல்களும் மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மருத்துவ உதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் விஷேட கவனம் செலுத்தினர். ஆனாலும்கூட இவை எல்லாவற்றிலும் வழித்துணைக்கு செல்கின்ற இந்த கடல்வழித் துணை அனுபவசாலிகளே பக்கபலமாக இருந்து களத்தில் சூழ்நிலைகளை சமாளித்துச் செல்லுகின்ற பெரும் பொறுப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டனர்.

**சுழியோடி வைரப்பா**

இந்த சந்தர்ப்பத்தில் கடலோடிகளாக வல்வை மண்ணில் பிறந்தவர்களது அனுபவம், ஆற்றல், தனித்துவம் என்பவற்றை அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடியதான ஒரு மண்ணின் மைந்தனைப் பற்றி இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது. இவருடைய பெயர் திரு.சி.குமரகுரு. திரு.சி.குமரகுருவை எல்லோரும் வைரவர் என்றே அழைப்பார்கள். உற்சவகாலங்களில் தீக்குளித்தல், சாட்டையடி வாங்குதல் என்பவற்றில் இவர் காவல்தெய்வம் வைரவர் போலவே உருக்கொண்டு காட்சி அளிப்பார்.

எமது மண்ணைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாலும் மதிக்கப்பட்ட ஒருவர். ஈடுஇணையற்ற சாதனையாளன். எந்த வித நவீன சுழியோடும் கருவிகளும் அணியாது பத்து நிமிடங்களுக்கு மேல் கடலின் ஆழத்திற்கு சுழியோடி சென்று செயற்படக்கூடியவர். தீர்வு காண முடியாத நாடறிந்த பல பிரச்சினைகளை தனியாக சுழியோடிச் சென்று தீர்த்துவைத்தவர். இதனால் இவர் அமரத்துவம் அடைந்த பொழுது மாமனிதர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டதையும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல திருகோணமலைத் துறைமுகத்தில் பிரமாண்டமான கப்பல் ஒன்று செயற்படமுடியாது பிரச்சனையை எதிர்நோக்கியது. கப்பல் தலைவன் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. அப்பொழுது சி.குமரகுருவின் உதவி நாடப்பட்டது. சி.குமரகுருவிற்கும் அது சவாலாக இருந்தாலும் உயிருக்கு அஞ:சாது தனது தனித்துவமான திறமையால் கப்பல் இயக்கத்திற்கு இருந்த தடைகளை சுழியோடிச் சென்று சிறிது சிறிதாக நீக்கி அதில் முழு வெற்றியும் அடைந்தார். கப்பல் தலைவன் நெஞ்சாரப் பாராட்டி பெறுமதி மிக்க பரிசுகளும் வழங்கினான்ஃ ஆம் இவ்வாறான திறமைசாலிகள் வாழ்ந்த மண்தான் வல்வை மண். இப்படிப் பட்டவர்களது உதவிகள்தான் ஆனந்தனது முதலாவது சாதனைக்கும் அவசியமாக இருந்தது.

**உடனிருந்து உதவியோர்**

இவ்வாறு இறுதிவரை உறுதியாகவும் பொறுமை யாகவும் செயற்படக்கூடிய அனுபவமுள்ள இளம் கடலோடிகளே இதற்கு தெரிவு செய்யப்பட்டனர். திரு. செ. சாம்பசிவம், திரு. பரஞ்சோதி, திரு. ந.குணரத்தினம், திரு. பொ. ஸ்ரீஸ்காந்தராசா, திரு. க.துரைராசா, திரு. இராசலிங்கம், திரு.து.தவராசா (வைலஸ் குட்டி), இ.செல்லத்தம்பி (ஓடுக்கர்) ... போன்ற பலர் இதில் இடம்பெற் றிருந்தனர். வல்வையில் சுங்க இலாகவிற்கு முன்பாக உள்ள மண்ணிலிருந்து கடல் வழியாக நீந்துகின்ற செயற்பாடு 1963ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி ஆரம்பமாகியது. இவ்வாறு ஆரம்பித்த நீச்சல் சாதனை முயற்சி கோடியாக்கரை வரை தொடர்ந்தது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனது சாதனை தொடர்பான பயணத்தில் பல சோதனைகளை சந்திக்கவும் நேர்ந்தது. இவ்வாறான தடைகள் பலவற்றைத் தாண்டி ஆனந்தனை திருப்பி வல்வை மண்ணுக்கு கொண்டுவந்து சேர்க்கின்ற பணிவரை இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

## எதிர்கொண்ட சவால்கள்

ஆழிக்குமரன் ஆனந்தன் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநாட்டிய செயற்பாடு சாதாரணமாக இடம்பெற்ற ஒரு நிகழ்வு அல்ல என்பது பலர் அறிந்திராத விடயமாகும். தமது அனுபவத்தின் அடிப்படையில் நீரோட்டங்களையும் சுழிகளையும் சரியாகக் கணித்து தக்க தருணத்தில் தக்க விதமாகச் செயற்பட்டு நிறைவேற்றிய கருமங்களாகும். உண்மையை கூறுவதானால் மூன்றில் இரண்டு பங்கு தூரத்தை சென்றடைந்தபின் நீரோட்டங்களில் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஆனந்தன் மிகப் பெரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதனால் தனது சாதனை முயற்சி நிறைவேறாமல் போய்விடுமோ என்ற ஆதங்கமும் ஆனந்தனுக்கும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அவருடன் வழித்துணையாக சென்றவர்களின் நெறிப்படுத்தலும் உற்சாகமும் சமயோசித செயற்பாடுகளும் அவர் தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிவகுத்தன. இதில் நேரடியாகப் பங்குபற்றியவர்கள் ஆனந்தன் சந்தித்த சவால்கள் தொடர்பாக அப்பொழுதே தெரிவித்த நுணுக்கமான தகவல்கள் இன்றும் எனது மனதில் அழியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்திருக்கின்றது. இந்த நன்றியுணர்வுடன் தான் ஆழிக்குமரன் ஆனந்தன் இறுதிவரை வாழ்ந்துள்ளார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## உடனிருந்தோர் உணர்வலைகள்

ஆழிக்குமரன் ஆனந்தனுடன் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையில் பக்க துணையாக சென்று பாடுபட்ட பலர் தற்பொழுது அமரர்களாகிவிட்டார்கள். அதில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு த.சுந்தரமணி , திரு.செ.பரஞ்சோதி, திரு.பொ. ஸ்ரீஸ்காந்தராசா ஆகியோர் 80 அல்லது 85 வயதுகளைத் தாண்டிய நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதில் மிக முக்கிய பங்கு வகித்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. த.சுந்தரமணியை 10.05.2019இல் அவருடைய இல்லத்திற்கு சென்று சந்தித்து அவருடன் உரையாடினேன். அவர் வெளிப்படுத்திய தகவல்களை அப்படியே இங்கே வழங்குகின்றேன்.

சுங்க இலாகாவிற்கு முன்பாக உள்ள கடலில் இருந்து கோடியாக் கரை வரை நீந்திச் சென்ற ஆனந்தனுடன் பக்கதுணையாகச் சென்று மீண்டும் இதே இடத்தில் அவரை கொண்டுவந்து இறக்கும் செயற்பாடு வரை அனைத்திலும் நான் பங்குபற்றியுள்ளேன். உதயசூரியன் என்ற எனது வள்ளத்தில் என்னுடன் உத்தியோகபூர்வமாக கோடியாக் கரைவரை பயணிப்பதற்கு ஐந்து பேருக்கு பொலிஸ் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. திரு. து. தவராசா, திரு. அழகையா, திரு. இராமசாமி, திரு. நவரத்தினம், திரு. தம்பிராசா ஆகியவர்களே அவர்கள். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் இந்த ஐவரும் தற்பொழுது அமரராகி விட்டனர். எனது வள்ளத்திலேயே ஒலிபெருக்கி பூட்டப்பட்டிருந்தது. இறுதி நேரத்தில் நீச்சல் செயற்பாட்டில் சில பிரச்சனைகளை ஆனந்தன் எதிர்நோக்க வேண்டியிருந்தது. கோடியாக்கரையை ஆனந்தன் அடைந்தபொழுது அங்கே அவருக்கு பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. அவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் வழங்கப்பட்டது. வாண்டே என்று அழைக்கப்பட்ட இராமசாமி என்ற பிரபல அரசியல்வாதி யும் செல்வமும் செல்வாக்குமுள்ள பெரியவர் தலைமையில் இந்த வரவேற்புகள் இடம்பெற்றன. இங்கிருந்து சென்ற அனைவருக்கும் பானங்களும் உணவுகளும் தாராளமாக வழங்கி கோடியாக்கரையில் உள்ளவர்கள் எங்களை மகிழ்ச்சியில் திணறடிக்க வைத்தனர். ஆனந்தனுக்கு பெரும் பாராட்டும் புகழாரமும் வழங்கப்பட்டது. ஒரு சில மணித்தியாலத்தின் பின் நாம் அங்கிருந்து எமது மண்ணுக்கு புறப்பட்டோம். இதில் முன்னின்று செயற்பட்ட சில இளைஞர்கள் எமது உதயசூரியன் வள்ளத்தில் திரும்பிக் கொண்டிருந்த ஆனந்தனை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வாடி வானில் இறக்க வேண்டுமென்று கூறினார்கள். ஆனாலும் புறப்பட்ட இடமான சுங்க இலாகாவிற்கு முன்பாகவே ஆனந்தன் கரையில் இறக்கப்படுவது பொருத்தமென கருதியதால் வல்வையில் செயற்பட்டுக் கொண்டிருந்த சுங்க இலாகாவிற்கு முன்பாகவே அவர் கரையில் இறக்கப்பட்டார். வல்வை மண்ணை சேர்ந்த எல்லா பகுதி மக்களும் அங்கே பெரும் திரளாக கூடியிருந்து ஆரவாரமான வரவேற்பு வழங்கினர். பின்னர் அவர் முக்கியமான வீதிகளில் ஊர்வலமாக அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்டார். ஆதி வைரவர் ஆலயத்திற்கும் அழைத்து வரப்பட்டார். இறுதியில் தெணியம்பையில் உள்ள ஆனந்தனது வீடு வரை நாம் அவரை அழைத்துச் சென்றோம். அங்கே எங்களுக்கு மிகுந்த உபசரிப்பு ஆனந்தனது குடும்பத்தினர்களால் வழங்கப்பட்டது.

ஆதிஜயா என்ற சங்க வள்ளத்தின் உரிமையாளர் பரஞ்சோதி. இவர் கலாபூசனம் என்ற விருதுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவருடைய வள்ளமும் ஆரம்பம் முதல் இறுதி வரை இந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. சற்று உடல் தளர்ந்த நிலையில் இருந்தாலும் நீச்சல் சாதனை பற்றி மிகவும் உற்சாகத்துடன் தனது உள்ளத்து உணர்வுகளை பரஞ்சோதி பின்வருமாறு வெளிப்படுத்தினார்.

ஆரம்பம் முதல் கோடியாக்கரையை ஆனந்தன் சென்றடையும் வரை நாங்கள் எல்லோரும் ஆர்வத்துட னும் அக்கறையுடனும்தான் செயற்பட்டுக் கொண்டிருந் தோம். ஆனந்தனும் மிகுந்த தைரியத்துடனும் உற்சாகத்துடனும் நீந்தியவண்ணம் இருந்தார். கடைசி நேரங்களில் கடல் சூழலும் பாதகமாக இருந்தது. ஆனந்தனும் சோர்வடையும் நிலை ஏற்படத் தொடங்கியது. அப்பொழுது ஆனந்தனுக்கு உற்சாகம் வழங்கும் வகையில் நானும் அவருடன் இணைந்து பல மைல்கள் ஒன்றாக நீந்தி அவருக்கு உற்சாகம் வழங்கிக் கொண்டிருந்தேன். இதேபோன்ற ஏனைய இளைஞர் களும் அவருடன் தேவை ஏற்படும் பொழுதெல்லாம் நீந்துகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். கோடியாக் கரையை அடைந்த பொழுது அது எங்கள் எல்லோருக்கும் கிடைத்த வெற்றியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி பெருமையும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தோம்.

இந்த செயற்பாட்டில் இறுதிவரை செயற்பட்ட திரு. பொ.சிறிஸ்காந்தராசாவையும் நேரில் சந்தித்து உரையாடினேன். ஆனந்தனது தந்தையார் கடலோடிகளாக இருந்த எம்மிடம் வந்து ஒத்துழைப்பைக் கேட்டது தொடக்கம். ஆனந்தன் நீந்தி கோடியாக் கரைவரை சென்றடைந்த விபரங்களை உற்சாகத்துடன் எம்மிடம் வெளிப்படுத்தினார். இங்கிருந்து புறப்படும் பொழுதே வள்ளங்களுடன் ஒரு கட்டுமரமும் தொடுத்துச் செல்லப்பட்டது. ஆனந்தனுக்கு உணவு வழங்குவது உற்சாகப்படுத்துவது அருகில் பக்கதுணையாக கட்டுமரத்தை வலித்துச் செல்வது போன்ற தேவைகளுக்கு இந்த கட்டுமரம் பயன்படுத்தப்பட்டது. இறுதிநேரத்தில் ஆனந்தன் களைப்படைந்து சோர்ந்து போகும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது இந்தக் கட்டுமரத்தில் இருந்தவாறுதான் அவருக்கு மிக நெருக்கமாக அணுகி அவரை உற்சாகப்படுத்தினோம். இதில் பலமுறை இவ்வாறு நான் செயற்பட்டுள்ளேன். இவ்வாறு தனது அனுபவத்தை திரு.சிறிஸ்கந்தராசா வெளிப்படுத்தினார்.

**சாதனைக்கான ஆளுமை**

ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற ஒரு தனிமனிதன் ஏழு பதியப்பட்ட கின்னஸ் உலக சாதனைகளையும், பதியப்படாத 20இற்கு மேற்பட்ட உலக சாதனைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றிய மைக்கு அவரது விஷேட மான ஆளுமைப் பண்புகள்தான் காரணமானவை என நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக் கூறலாம். ஆனால் சாதாரணமாக நாம் யாரிடமும் கண்டிராத காணமுடியாத ஒரு ஆற்றல் அவரிடம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இதனை நாம் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு இராம கிருஷ்ண பரம கம்சருடைய வாழ்க்கை பாதையை எடுத்துக்காட்டுவது பொருத்தமானது. இராம கிருஷ்ண பரம கம்சருடைய பதினைந்து வயதுப் பருவத்திலேயே அவருக்கு இயல்பாக ஆன்மிக நாட்டம் ஏற்பட்டதனை நாம் பார்க்கமுடிகிறது. அவர் அந்த ஆன்மிக நாட்டத்திற்கு ஆட்பட்டு அருணாசலத்திற்கு சென்று பாலதுறவியாக தனியாக பல நாட்கள் நிஷ்டையில் இருப்பதை பார்க்கின்றோம். இவ்வாறு தன்னை புடம்போட்டு தனது ஆன்மிக உணர்வில் மேலும் தன்னை ஆழமாக வளர்த்துக் கொள்ளுகின்றார். இதனால் உலக மக்கள் மதிக்கும் மகானாக உயர்வுபெற்றார்.

இதேபோன்றுதான் ஆழிக்குமரன் ஆனந்தனிடமும் ஏறத்தாழ 15, 16 வயதிலேயே உலக சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்ற விருப்பமும், அவரிடம் மட்டுமே நாம் காணக்கூடியதுமாக இருந்த மன வைராக்கியம் அவரிடம் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு பரம கம்சரைப் போலவே இயல்பாகவே தன்னிடமிருந்த அந்த துணிச்சல் மிக்க மன வைராக்கியத்தை ஆனந்தனும் புடம்போட்டு வளர்த்துக் கொண்டதை நாம் காணமுடிகிறது. இதனால் தான் வேறு எவரிடமும் நாம் கண்டிராத துணிச்சலான இலக்குகளும், மிக உச்சமான, மன வைராக்கியமும் அவரிடம் வெளிப்பட்டது. இந்த வெளிப்பாடுகளே அவரின் உயர்வுகளுக்கும் வெற்றிகளுக்கும் ஆணி வேர்களாக அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் ஆசிரியர் பகிர்வுகள்

ஆழிக்குமரன் ஆனந்தன் வல்வை மண்ணில் பிறந்த ஒரு உச்சமான உலக சாதனையாளன் என்ற வகையில் அவரது வாழ்க்கைப் பாதையை உற்று நோக்கிப் பார்க்கின்ற ஒரு சராசரி வல்வை மகனாக நான் வாழ்ந்துள்ளேன். அதைவிட மூன்று தடவைகள் அவரைச் சந்திக்கின்ற சந்தர்ப்பங்களும் எனக்கு கிடைத்திருந்தன. அவர் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண் டிருந்தவேளை எமது வீட்டில் பல தடவைகள் அவரைச் சந்தித்துள்ளேன். எனது சகோதரியின் கணவரான பொ. தனபாலசிங்கத்தை சந்திக்கவந்த சந்தர்ப்பங்களாக இவை இருந்தன. அது மட்டுமல்ல நாகர்கோவிலில் இருந்து கடல்வழியாக தொண்டைமானாறு வரை ஆனந்தன் நீந்தி வரும் வேளை வழித்துணையாக வந்தவர்களுடன் சிறுவனான நானும் கூடச் சென்றிருந்த தும் பசுமையான நினைவுகளாக உள்ளன.

1972 அல்லது 1973 ஆம் ஆண்டு என நினைக் கின்றேன் நான் வல்வை சிதம்பரக் கல்லூரியின் புவியியல் மன்ற தலைவராக இருந்தபொழுது பாடசாலை மாணவர்களுக்கு அகில இலங்கை சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்திருந்தோம். அவ்வாறு சென்ற பொழுது கொழும்பில் ஒரு பிரபல ஹொட்டலில் சுற்றுலா மாணவர் களுக்கு ஒரு இரவு விருந்தினை ஆனந்தன் வழங்கி யிருந்தார். அப்பொழுது ஒரே மேசையில் உடன்இருந்து ஆனந்தனுடன் பழைய உணர்வுகளையும் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. பின்பு நான் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்பொழுது 1979 ஆம் ஆண்டு விகாரமகாதேவி பூங்காவில் ஆனந்தன் தொடர்ச்சியாக சைக்கிள் ஓடுகின்ற உலக சாதனையை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுதும் நேரடியாகச் சென்று உற்சாகமூட்டியிருந்தேன். இவ்வாறு விகாரமகாதேவி பூங்காவிற்கு சென்ற சந்தர்ப்பத்தில் இரத்த கசிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் அசாதாரண மன வைராக்கியத்துடன் தனது சாதனைச் செயற்பாட்டை தொடர்ந்து கொண்டு இருந்ததை நேரடியாகக் காணுகின்ற சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்தது.

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த பின் பல உலக சாதனைகளையும் கின்னஸ் சாதனைகளையும் நிகழ்த்திக் காட்டிய மாவீரன் ஆழிக்குமரன் ஆனந்தன். இதனை இன்னொரு விதமாகக் கூறுவதானால் பாக்குநீரிணை என்ற உலக சாதனைக் கட்டிடத்தின் மேல் கட்டப்பட்ட கோபுரங்களே ஆனந்தனுடைய உலக சாதனைகளும் கின்னஸ் சாதனைகளும் எனவும் கூறலாம்.

ஆனாலும் ஆழிக்குமரன் ஆனந்தன் பிறந்த மண்ணை களமாகக் கொண்டு அவன் பிறந்த மண்ணில் உள்ளவர்களின் உற்ற துணையுடன் அவன் உறவினர்கள் சுற்றத்தவர்கள் கண் முன்னால் நிகழ்த்தப்பட்டு அவன் பிறந்த மண்ணிலேயே ஆழிக்குமரன் என்ற பட்டமும் வழங்கப்பட்ட அவனது முதலாவது உலக சாதனை பற்றிய விபரங்கள் இதுவரை வெளிவராதிருந்தது எனக்குள் ஒரு ஆதங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல அவனது மண்ணில் அவருக்கு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் சூட்டப்பட்ட ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற பட்டப் பெயரே இன்று வரை அவரது பெருமைக்குரிய பெயராகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவேதான் முடிந்த வரை அவரது முதலாவது சாதனை தொடர்பானஇதுவரை வெளிவராத தகவல்களை சுருக்கமாகவேனும் இங்கே வெளிப்படுத்த முயற்சித்துள்ளேன்.

**மாவீரன்**

அதேநேரம் 1983ம் ஆண்டு அவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியின் பொழுது கங்காதேவியுடன் அவரது உயிர் சங்கமமாகியதையும் எண்ணிப் பார்க்கின்றோம். அந்த சாதனை முயற்சியின் பொழுது பாக்குநீரிணையில் நடந்தது போன்று முன்னோடி முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு, முறையான முன் எதிர்வுகள் கணிக்கப்பட்டு அவரின் உயிருக்கு உயிரான மண்ணின் சொந்த பந்தங்களின் துணையுடன் அது நடை பெற்றிருந்தால் இவ்வாறான துன்பியல் நிகழ்வு நடைபெறாதும் போயிருக்கலாம் என்ற ஆதங்கமும் பல பேரிடம் காணப்படுகின்றது. ஆனாலும் தான் மாவீரன் என்பதை ஆழிக்குமரன் ஆனந்தன் அங்கேயும் வெளிப்படுத்தியுள்ளான். அவன்தான் ஆனந்தன். அவன் புகழ் வாழ்க. அவன் பிறந்த மண்ணின் புகழ் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 வருடங்களாக ஓடிக்கொண்டிருக்கின்றேன்

எனது மூத்த சகோதரர் ந.சிவரட்ணம் (டீயமெனச) பல வருடங்களுக்கு முன்பு பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சில வரிகளை இங்கு வழங்கி மண்ணின் மான்பை தொடருகின்றேன்.

1961ம் ஆண்டு ஒரு காலையில் தாம் உண்டு தமது வேலை உண்டு என இயல்பாக அமைதியாக இருந்த மக்கள் மீது அப்பகுதியில நடமாடிய இராணுவம் சில பதட்டநிலைகளை தோற்றிவித்ததாக கூறப்படுகின்றது. இதனால் நிராயுத பாணிகளாக இருந்த பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே ஒரு மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் இரண்டு இராணுவமும் இரண்டு பொதுமக்களும் விழுப்புண் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அப்பொழுது வல்வெட்டித்துறையில் இருந்த தமிழ் பொலிஸ் தலைமை அதிகாரி உதவியுடன் விழுப்புண் அடைந்த வீர மறவர்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு பல சிரமங்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டதனால் உயிர் பிழைத்தனர்.

### முதல் ஊரடங்கும் முதல் இடப்பெயர்வும்

இதன்பின் ஆதி கோவில் கிராமப்பகுதி மிகுந்த பதட்டம் நிறைந்த சூழலுக்கு தள்ளப்பட்டது. இராணுவம் இப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கியது. முழு மக்களது உயிர்களும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஆம் இதனால் தமிழர் தாயகப் பகுதியின் முதலாவது இடப்பெயர்வும் முதலாவது பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் இந்த மண்ணில்தான் ஏற்பட்டது. அப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் எட்டே வயது நிரம்பியவனாக நான் இருந்தேன். ஆனாலும் இவைகள் யாவும் மிகத் தெளிவாக இன்றும் அடிமனதில் ஆழமாகவே பதிந்திருக்கிறது. இந்த பயங்கர அனுபவங்களை எப்படி மறக்க முடியும். எப்படி மனதில் இருந்து அகற்ற முடியும். இதில் சம்பந்தப்பட்ட அந்த வீர மறவர்கள் அன்றாடம் நான் சந்திக்கின்ற ஊரவர்கள் சிலர் உறவினர்கள். திரு. சு.அழகையா, திரு. மார்க்கண்டு, திரு. பஞ்சலிங்கம், திரு. இராமசாமி ஆகியோர் இதில் நேரடியாக சம்பந்தப்பட்ட மண்ணின் மறவர்களாவார். இதில் அப்பொழுது 20 வயது துடிப்புள்ள இளைஞனாக இருந்த திரு.பஞ்சலிங்கம் அவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

உயிரைக் காப்பதற்காக அன்று மாலையே இந்த கிராமத்து மக்கள் அனைவரும் அகதிகளாக அடுத்தடுத்த கிராமங்களுக்கு புலம்பெயர்ந்து சென்றனர். இராணுவத் தினருடனான மோதல் இடம்பெற்றதால் பெரியவர்கள் கலக்கமடைந்த அந்த சூழல் சிறுவர்களாக இருந்த எமக்கும் அது ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. தாய்க் கோழி குஞ்சுகளை எவ்வாறு பறந்தடித்து காப்பாற்றுமோ அதேபோல ஏழு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு எமது பெற்றோர் பதட்டத்துடனும் பயத்துடனும் கம்பர்மலை கிராமத்திற்கு சென்றது நன்றாக ஞாபக மிருக்கிறது. ஒழுங்கையால் நடந்துசென்று ஆலடியில் ஏறினோம். பின் றோட்டைக் கடந்து ஆலடியின் தெற்கு ஒழுங்கையால் நடந்து கம்பர்மலைக்கு சென்றோம். அங்கே தலைவர் தங்கராசா என்பவருடைய வீட்டில் பல நாட்கள் நாம் தங்கியிருந்தோம். ஏற்கனவே எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாருக்கு அறிமுகமான அவர்கள் எம்மை மிக நன்றாக உபசரித்ததையும் பலமுறை நான் மீட்டுப் பார்த்திருக்கிறேன். தலைவர் தங்கராசா என்பவர் அண்மைக் காலத்திற்கு முன்பு உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய அருணகிரிராசாவின் தந்தையாராவர்.

ஆனாலும் சில தினங்களுக்கு பின்பு இரண்டு பகுதியினருடைய சரி பிழைகள் பேச்சுவார்த்தை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலைமைகள் சுமுக நிலைக்கு கொண்டுவரப்பட்டது. இதன் பின்பு இங்கே பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே சுமூகநிலை ஏற்படுத்தப்பட்டது. இந்த கிராமத்து மக்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்து வாழும் மக்களுக்கு முன்மாதிரியான வாழத் தொடங்கினர்

அதே நேரம் தமிழ் மக்களது உரிமை களை மீட்டு எடுப்பதற்கான ஜனநாயக ரீதியான தேர்தல் செயற்பாடுகளிலும் அன்று தொடக்கம் இன்றுவரை இந்த மக்கள் ஒருமித்த ஒரே குரலாக ஒற்றுமையின் வித்தாக இன்றுவரை வாழ்ந்து கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது.

### சமத்துவத்தின் அத்திவாரம்

தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் சாதி சமய வேறுபாடுகளை மறந்து சமத்துவத்தை தமிழ்மக்கள் மத்தியில் விதைப்பதற்கும் இந்த மண்ணே வித்தாக அமைந்திருந்த வரலாற்றையும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாது. 1977 ஆம் ஆண்டு சிறுபான்மை தமிழரான இராசலிங்கத்தை பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளராக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்த பொழுது ஒரு சலசலப்பு ஏற்பட்டது. இந்நிலையில் தமிழ்த் தலைவர்களை ஒற்றுமைப் படுத்துவது முன்னின்று உழைத்த பெருமைக்குரிய ஞானமூர்த்தி அப்பா எமது மண்ணில் இருந்து அவருக்கு முதல் ஆதரவை வழங்கவேண்டும் என முடிவெடுத்தார். ஞானமூர்த்தி அப்பாவின் முடிவை வல்வையில் குறிப்பாக இந்த ஆதி கோவிலடி மக்கள் வெளிப்படையாக ஆதரித்தனர். இவ்வாறான ஆதரவுடனும் அரவணைப்புடனும் திரு.இராசலிங்கம் வரவேற்கப்பட்டு அவரது முதலாவது தேர்தல் கூட்டம் அலைகடல் என திரண்ட மக்கள் மத்தியில் இந்த மண்ணில் நடாத்தப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மேலதிக வாக்குகளால் அவர் தெரிவு செய்யப்பட்டார். எதிர்த்தவர்கள் கட்டுக்காசு இழந்தனர். இவ்வாறு ஈழத்தமிழ் மக்கள் சாதித்து துவேஷம் அற்ற மக்கள் என்றும் சமத்துவத்தை விரும்பும் மக்கள் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. வல்வை மண்ணில் உள்ள இளம் சமுதாயத்தினர் வல்வை மண்ணுக்கு சிறப்பையும் புகழையும் சேர்க்கும் பல்வேறு செயற்பாடு களை இன்றும் தமது பாணியில் செய்துகொண்டு இருப்பதையும் நாம் காணமுடிகிறது.

### அதியர் பணியில் மனப் பதிவுகள்

வரலாறுகள் மறைக்கப்படவோ, மாற்றப்படவோ, அல்லது மறக்கப்படவோ கூடாது. அவ்வாறு நடைபெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால் அது குழப்பங்கள், பிரச்சனைகளை எதிர்காலத் தவருக்கு ஏற்படுத்துவதாக அமைந்துவிடும்.

பெருமைக்குரிய ஏராளம் மண்ணின் மைந்தர்களை உருவாக்கிய பாடசாலை யா/ சிதம்பரக் கல்லூரி. இப்பாடசாலையில் ஒரு கட்டத்தில் நாற்பது மாணவர்கள் மட்டும் கல்வி கற்கின்ற பரிதாப நிலையும் ஏற்பட்டது. இதனால் இப்பாடசாலை மூடப்பட்டு விடுமோ என பலர் விழித்துக்கொண்டு செயற்பட்டனர். இதில் மிக முக்கியமான ஒருவர் டாக்டர் கோணேஸ். அன்று தொடக்கம் சுயநலம் எதுவுமின்றி இன்றுவரை பாடசாலைக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு மண் பற்றாளராக நாம் இவரை கூறமுடியும். நான் சிதம்பரக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்று ஒரு சில மாதங்களின் பின் டாக்டர் கோணேஸ் கொழும்பில் என்னைச் சந்தித்து உரையாடினார். அப்பொழுது அவர் மனம் திறந்து வெளிப்படையாக சில விடயங்களை என்னிடம் தெரிவித்தார். தாங்கள் எல்லா விடயங்களிலும் இப் பாடசாலையை முன்னேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம். ஆனாலும் இரண்டு விடயங்களில் பெரிதாக தங்களால் எதனையும் செய்ய முடியாதிருப்பதையும் கவலையுடன் தெரிவித்தார். இந்த மண்ணில் பிறந்த நீங்கள் தான் இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென மிகவும் வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

1. இப் பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை துரிதமாக அதிகரிக்கச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இப் பாடசாலைக் கல்வித்தரம் வரலாற்று காலத்தில் இருந்தது போல உயர்வடைய வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களிலும் அவர்கள் எதிர்பார்த்த நிலைக்கு அல்லது அதைவிட உயர்வான நிலைக்கு குறுகிய காலத்தில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த மண்ணில் கல்விப்புலத்தில் இடம்பெற்ற இவ்வாறான வரலாற்று தகவல்களும் பல்வேறு தேவைகள் கருதி வரலாற்று ஆவணமாக்கப்படுவது அவசியமானதாகும்.

நான் சிதம்பரக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் வருடாந்தம் சராசரி நூறு மாணவர்கள் வீதம் இந்த பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அதிசயிக்கத் தக்கவகையில் அதிகரித்துச் சென்றது. அதேநேரம் தூரநோக்கில் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை எதிர்காலத்தில் ஒருபோதும் இரண்டு இலக்கத்திற்கு வருமளவுக்கு குறையக் கூடாதெனவும் முடிவு எடுத்தேன். இதற்காக எமது பாடசாலையில் தரம் ஒன்றில் இருந்து வகுப்புகளை நடாத்துவதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு முடிவு செய்தேன். அது இலகுவான காரியமல்ல. இதனால் அதுவரை எவரும் இந்த முயற்சியில் இறங்கவும் இல்லை. இது பற்றிச் சிந்திக்கவுமில்லை. ஆனால் கல்விப் புலத்தில் எனக்குள்ள ஆளுமையைப் பயன்படுத்தி யா/ சிதம்பரக் கல்லூரியில் ஆரம்பப்பிரிவு வகுப்புகளை 2004ம் ஆண்டு ஆரம்பித்தேன். இதற்கான அனுமதி அதிபரை தலைவராகக் கொண்டு செயற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக கல்வி அமைச்சிலிருந்து முறைப்படி பெறப்பட்டது. நான் இடமாற்றம் பெற்று செல்லும்பொழுது உத்தியோக பூர்வமாக என்னால் வெளியிடப்பட்ட *11.02.2005*ஆம் திகதியிடப்பட்ட செய்தி அறிக்கையில் இது பற்றியும் குறிப்பிட்டுள்ளேன்.

யா/ சிதம்பராக் கல்லூரியில் தரம் ஒன்றிலிருந்து வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதால் வல்வையிலுள்ள பாடசாலைகள் ஒரு பாடசாலை சமுகம் மற்றைய பாடசாலைச் சமுகத்தை பரஸ்பரம் குற்றம்சாட்டுவது உட்பட பல பிரச்சனைகளும் இன்று முற்றும் முழுதாக மறைந்துபோய் விட்டதையும் நாம் காண முடியும்.

ஆளுமை உள்ள பலர் எமது மண்ணில் ஆன்மீகம், ஆலயத் திருப்பணி உட்பட எல்லாவகையிலும் வரலாறுகளை படைத்துவிட்டுதான் சென்றுள்ளனர். ஆகவே வரலாறுகளை படைக்க முயற்சியுங்கள். உலகத் தமிழர்களுக்கு உணர்வூட்டிக் கொண்டிருக்கும் மண் வலவை மண். எனவே இந்த மண்ணின் மாண்பை காப்பதற்காக செயற்படுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு

கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்ட ஆழிக்குமரன் ஆனந்தனின் ஏழு உலக சாதனைகளும் ஒரே பார்வையில்,

- ✧ தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு பாக்கு நீரிணையை இருவழிப் பயணமாக 1976 இல் நீந்திய உலக சாதனை.
- ✧ 187 மணித்தியாலங்கள் இடைவிடாது 1487 மைல்கள் சைக்கிள் ஓடிய உலக சாதனை - 1979 கொழும்பு
- ✧ 136 மணித்தியாலங்கள் இடைவிடாது போல் பஞ்சில் உலக சாதனை - 1979 கொழும்பு.
- ✧ ஒற்றைக்காலில் 33 மணி நேரம் நின்று உலக சாதனை - 1980 கொழும்பு
- ✧ இரு நிமிட நேரத்தில் 165 தடவை இருந்து எழும்பிய உலக சாதனை - 1980
- ✧ கை கிக்ஸ் (High Kicks) என்ற உலக சாதனை 9100 தடவை - கொழும்பு - 1980
- ✧ 80 மணித்தியாலங்கள் தொடர்ந்து நீச்சல் தடாகத்தில் தவளை போல மிதத்தல் - தமிழ்நாடு - 1981

இவ்வாறு தனி ஒரு நபர் ஏழு உலக சாதனைகளை நிலைநாட்டியதும் ஒரு உலக சாதனையாகக் கருதப் படுகிறது.

இவற்றைவிட பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தமை உட்பட கின்னஸ் புத்தகத்தில் இணைக்கப்படாத இருபதுக்கும் மேற்பட்ட உலக சாதனைகளையும் ஆனந்தன் நிகழ்த்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AALIKUMARAN ANANDAN'S RECORDS

Anandan was a sportsman of outstanding calibre and perhaps the most remarkable endurance athlete of all time. In his short life time V S C Anandan attempted and broke 20 records. Of these 20 records, seven were accepted and published in the renowned Guinness Book of Records. The remainder were not accepted because, some were broken by others by the time applications were made to Guinness, or were not in categories recognised as records.

In 1982 Anandan had the distinction of holding 6 records simultaneously. He was the only person to have his name entered in the Guinness Book of Records 7 times, which was another record !

***SEVEN RECORDS THAT WERE LISTED IN THE GUINNESS BOOK OF WORLD RECORDS***

1) **Only person to do two way Palk Strait swim ( Sri Lanka to India and back)** (April 1975)

2) **Non-stop cycling: 1,487 miles in 187 hours (7.8 days)** (May 1979)

3) **Non-stop ball punching: 136 hours 28 min (5.7 days)** (Dec 1979)

4) **Balancing on one foot: 33 hours** (May 1980)

5) **Sit ups: 165 in 2 minutes** (May 1980)

6) **High kicks: 9,100 kicks in 6 hours 51 min** (Dec 1980)

7) **Treading Water: 80 hours (3.3 days)** (July 1981)

The record for sit ups was achieved just before the record for balancing on one foot. Anandan was the only person to establish two Guinness records on the same day.

***OTHER NOTABLE PERFORMANCES WHICH WERE NOT ACCEPTED AS RECORDS***

1) **Non-stop twist dance: 128 hours (5.3 days)** (Dec 1978)

2) **Speed half squats carrying 70 lb barbell: 2,000 times in 26 minutes 10 seconds** (1980)

3) **Non stop walking: 149 hours (6.2 days)** (Aug 1981)


4) **Pulling 5 spring 80 lb strength chest expander: 38 times in 1 minute** (Dec 1982)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org